சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 09.04.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 02/2026 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-9 |
| சாட்சியின் பெயர் | : | மணிவண்ணன் |
| தந்தை பெயர் | : | காளிதாஸ் |
| கிராமம் | : | விலமல் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | கூத்தாநல்லூர் மண்டல துணை வட்டாட்சியர் |
| வயது | : | 49 |

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

## முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது கூத்தாநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல் துணை

வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். திருவாரூர் உட்கோட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வேண்டுகோள் கடிதத்தின்படி கூத்தாநல்லூர் வட்டம், 1. ஆய்குடி கிராமம் பட்டுடையானிருப்பு மேற்கு என்ற முகவரியில் வசித்து வரும் கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மகன் சாந்தகுமார் என்பவர் இந்து கள்ளர் சமூகத்தை சார்ந்தவர் என சாதி சான்றிதழ் கடந்த 10.11.2025-ம் தேதி வழங்கினேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார்என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:** -இல்லை-

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.04.09 18:37:26 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.